**ஆகஸ்ட் – 29**

# TNPSC துளிகள்

- 14வது இந்தியா-தாய்லாந்து கூட்டு இராணுவப் பயிற்சி மைத்ரீ, மேகாலயாவின் உம்ரோயில் உள்ள வெளிநாட்டு பயிற்சி முனையில் நடைபெறும் என்பதோடு இது ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு இந்திய நாட்டில் நடத்தப்படுகிறது.
- 2016 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டதிலிருந்து அரசாங்க இணையச் சந்தை (GeM) ஒட்டு மொத்த மொத்த வணிக மதிப்பில் (GMV) 15 லட்சம் கோடி ரூபாயைத் தாண்டியுள்ளது.
- மும்பையின் வான்கடே மைதானத்தில் புகழ்பெற்ற கிரிக்கெட் வீரர் சுனில் கவாஸ்கரின் வெண்கல சிலை திறக்கப்பட்டது.
- மத்திய தொழில்துறை பாதுகாப்புப் படை (CISF) ஆனது, பாலினச் சமத்துவத்தை ஊக்குவிப்பதற்காக அதன் முதல் அனைத்து மகளிர் படைப் பிரிவினைத் தொடங்கி உள்ளது.
- உள்நாட்டிலேயேத் தயாரிக்கப்பட்ட அனைத்து விரைந்து செயல்படும் நிலம் விட்டு வானில் உள்ள இலக்கினைத் தாக்கும் எறிகணைகள் (QRSAM) கொண்ட பல அடுக்கு வான் வழிப் பாதுகாப்பு அமைப்பான ஒருங்கிணைந்த வான் வழிப் பாதுகாப்பு ஆயுத அமைப்பின் (IADWS) முதல் ஏவுதல் சோதனைகளை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு வெற்றிகரமாக நடத்தியது.
- குஜராத்தின் அகமதாபாத்தில் 2030 ஆம் ஆண்டு காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளை (CWG) நடத்துவதற்கான இந்தியாவின் முயற்சியை மத்திய அமைச்சரவை அங்கீகரித்தது.
    - கடைசியாக 2010 ஆம் ஆண்டில் இந்த விளையாட்டுகளை நடத்திய இந்தியா 2030 ஆம் ஆண்டில் இப்போட்டிகளை நடத்துவதற்காக நைஜீரியாவுடன் போட்டியிடுகிறது.


# தமிழ்நாட்டுச் செய்திகள்

## பயணியர் கப்பல் சுற்றுலா விரிவாக்கம்

- புதிய இடங்களுக்கான சாத்தியக்கூறு ஆய்வுகள் திட்டமிடப்பட்டு தமிழ்நாட்டில் பயணியர் கப்பல் சுற்றுலா உருவாக்கப்பட்டு வருகிறது.
- இராமேஸ்வரம் மற்றும் கன்னியாகுமரி ஆகியவை சாத்தியமான பயணியர் கப்பல் சுற்றுலா இடங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன.
- தேவிப்பட்டினம், குருசடை தீவு, குந்துக்கல், வில்லூண்டி தீர்த்தம், அக்னி தீர்த்தம், கோதண்டராமர் கோயில் மற்றும் அரிச்சல் முனை ஆகியவை ஒரு முன்மொழியப்பட்ட பயணியர் கப்பல் சுற்றுலா சுற்றுத் தளங்கள் ஆகும்.
- சுற்றுலாப் பயணிகள் ஏறுவதற்கும், இறங்குவதற்கும் அக்னி தீர்த்தம் மற்றும் வில்லூண்டி தீர்த்தத்தில் மிதக்கும் படகுத் துறைகள் கட்டுமானத்தில் உள்ளன.
- அந்தமான் மற்றும் நிக்கோபாரின் பல்வேறு தீவுகளுக்கும், நிலப்பகுதிக்கும் இடையேயான பயணியர் கப்பல் போக்குவரத்து இணைப்பு குறித்து ஆராயும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- மலேசியா, இந்தோனேசியா மற்றும் தாய்லாந்து ஆகியவற்றுடன் சர்வதேச பயணியர் கப்பல் சுற்றுலா இணைப்பு குறித்த விவாதங்கள் தொடங்கப்பட்டுள்ளன.
- கப்பல் சுற்றுலாத் துறையில் உள்ள வாய்ப்புகளை ஆராய இந்தியாவிற்கும்,

மலேசியாவிற்கும் இடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

- பிராந்தியக் கப்பல் போக்குவரத்து இணைப்புக்காக இந்தோனேசியா மற்றும் தாய்லாந்துடன் மற்ற திட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளன.
- தற்போது இந்தியாவின் மேற்கு மற்றும் கிழக்குக் கடற்கரைகளுக்கு இடையே இயங்குகின்ற கோர்டெலியா பயணியர் சுற்றுலா நிறுவனமானது கிழக்குக் கடற்கரையில் அதன் பயணத்தினை விரிவுபடுத்துகிறது.
- ஒரு புதிய கோர்டெலியா குரூஸ் கப்பல் ஆனது சென்னையை அதன் துறைமுகமாகக் கொண்டு கிழக்குக் கடற்கரையில் நிரந்தரமாக நிறுத்தப்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.





# தேசியச் செய்திகள்

## நெடுஞ்சாலை சுங்க முறை குறித்த மறுமதிப்பாய்வு

- தற்போதைய நெடுஞ்சாலை சுங்க முறை குறித்து பொதுக் கணக்குக் குழு (PAC) ஒரு சில சிக்கல்களை எழுப்பியுள்ளது.
- சாலையின் தரம், போக்குவரத்து அளவு, அணுகல் தன்மை அல்லது திட்டத்தின் செலவினங்களை மீட்டெடுப்பது ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல், சுங்கங்கள் பெரும்பாலும் காலவரையின்றி வசூலிக்கப்படுகின்றன என்று அது கூறுகிறது.
- கட்டண விதிகளில் 2008 ஆம் ஆண்டு திருத்தம் மூலம் நிரந்தரச் சுங்கம் என்ற கருத்து அறிமுகப்படுத்தப்பட்டது.
- பின்னர் இது சலுகை காலத்திற்கு அப்பாலும் சுங்கம் வசூலிக்க அனுமதிக்கும் 2023 ஆம் ஆண்டு திருத்தத்தின் மூலம் முறைப்படுத்தப்பட்டது.
- நியாயமான மற்றும் வெளிப்படையான கட்டண நிர்ணயம், வசூல் மற்றும் ஒழுங்கு முறையை உறுதி செய்வதற்காக என விமான நிலையப் பொருளாதார ஒழுங்குமுறை

ஆணையம் (AERA) போன்ற ஒரு கட்டண ஆணையத்தை உருவாக்க PAC பரிந்துரை செய்தது.


- ❖ நெடுஞ்சாலைகள் முழுமையடையாத இடங்களில் தானியங்கிக் கட்டணத் திரும்பப் பெறுதல் அல்லது தள்ளுபடிகளை PAC பரிந்துரைத்தது.
- ❖ 2023–24 ஆம் ஆண்டில் 55,882 கோடி ரூபாய், 2022–23 ஆம் ஆண்டில் 48,032 கோடி ரூபாய், 2021–22 ஆம் ஆண்டில் 33,929 கோடி ரூபாய் மற்றும் 2020–21 ஆம் ஆண்டில் 27,927 கோடி ரூபாயுடன் ஒப்பிடும் போது 2024–25 ஆம் ஆண்டில் 61,408 கோடி ரூபாய் சுங்கக் கட்டணமாக வசூலிக்கப் பட்டது.





## கால்நடை இரத்தமாற்றம் மற்றும் இரத்த வங்கிகளுக்கான வழிகாட்டுதல்கள்

- ❖ இந்தியாவில் விலங்குகளுக்கான இரத்தமாற்றம் மற்றும் இரத்த வங்கிகளுக்கானப் புதிய வழிகாட்டுதல்களை கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத் துறை வெளியிட்டுள்ளது.
- ❖ உயிரிப் பாதுகாப்புத் தரநிலைகளுடன் மாநில அரசினால் ஒழுங்குபடுத்தப்பட்ட கால் நடை இரத்த வங்கிகளை நிறுவுவதை இந்த வழிகாட்டுதல்கள் கட்டாயமாக்குகின்றன.
- ❖ இரத்தமாற்றத்தின் போது இணக்கமின்மையைத் தடுப்பதற்காக என கட்டாய இரத்த வகை மற்றும் இரத்த வகை பொருத்தம் அவசியமாக்கப்பட்டுள்ளது.
- ❖ வயது, எடை, தடுப்பூசி வழங்கப்பட்ட நிலை, நோய்ப் பரிசோதனை மற்றும் கொடையாளி நிலையில் உள்ள இடைவெளிகளின் அடிப்படையில் கொடையாளி விலங்கின் தகுதி அளவுருக்கள் இந்த வழிகாட்டுதல்களில் வழங்கப்பட்டுள்ளன.
- ❖ தன்னார்வ, சன்மானம் வழங்கப்படாத இரத்த தானம் மற்றும் தகவலறிந்த ஒப்புதலை இந்த நெறிமுறைக் கட்டமைப்பு வலியுறுத்துகிறது.
- ❖ இரத்தமாற்றக் கண்காணிப்பு, பாதகமான எதிர்விளைவுகளை மேலாண்மை செய்தல் மற்றும் பதிவுகளை வைத்திருத்தல் ஆகியவற்றிற்கான நிலையான இயக்க நடைமுறைகள் இந்த வழிகாட்டுதல்களில் சேர்க்கப்பட்டுள்ளன.
- ❖ இந்த வழிகாட்டுதல்கள் டிஜிட்டல் பதிவேடுகள் மற்றும் நிகழ்நேர இருப்பு மேலாண்மையுடன் கூடிய தேசிய கால்நடை இரத்த வங்கி வலையமைப்பை அறிமுகப் படுத்துகின்றன.
- ❖ அவசர நிலைகள் மற்றும் அவசரப் பராமரிப்பில் விலங்குகளுக்கு பாதுகாப்பான, உயிர் காக்கும் வகையிலான இரத்தமாற்றங்களை வழங்குவதை இந்தக் கட்டமைப்பு நோக்கமாகக் கொண்டுள்ளது.

- விலங்குகளிடமிருந்து விலங்குகளுக்குப் பரவும் தொற்று அபாயங்களை மேலாண்மை செய்வதற்காக இந்த வழிகாட்டுதல்கள் ஒரு சுகாதாரக் கொள்கைகளை ஒருங்கிணைக்கின்றன.




## 2023-24 ஆம் ஆண்டில் பெண்களின் வேலைவாய்ப்பு விகிதம்




- 2017-18 ஆம் ஆண்டில் 22% ஆக இருந்த பெண்களின் வேலைவாய்ப்பு விகிதம் ஆனது 2023-24 ஆம் ஆண்டில் 40.3% ஆக சுமார் இரு மடங்காக உயர்ந்துள்ளதாக, வருடாந்திர தொழிலாளர் வளக் கணக்கெடுப்பு (PLFS) தரவுகள் தெரிவிக்கின்றன.
- 2017-18 ஆம் ஆண்டில் 5.6% ஆக இருந்த பெண்களின் வேலைவாய்ப்பின்மை விகிதம் 2023-24 ஆம் ஆண்டில் 3.2% ஆகக் குறைந்துள்ளது.
- கிராமப்புற பெண்களின் வேலைவாய்ப்பு 96% அதிகரித்துள்ளது அதே நேரத்தில்

நகர்ப்புற பெண்களின் வேலைவாய்ப்பு 43% அதிகரித்துள்ளது.

- ஊழியர் வருங்கால வைப்பு நிதி அமைப்பின் (EPFO) ஊதியத் தரவுகளின்படி, கடந்த ஏழு ஆண்டுகளில் சுமார் 1.56 கோடிக்கும் அதிகமான பெண்கள் முறையான பணியாளர் வளத்தில் சேர்ந்துள்ளனர்.
- கடந்தப் பத்தாண்டுகளில் பாலினம் சார்ந்த நிதி ஒதுக்கீடுகள் 429% அதிகரித்து, பெண்களின் தொழில்முனைவினை ஆதரித்தன.
- எழுபது மத்திய அரசுத் திட்டங்களும், 400க்கும் மேற்பட்ட மாநில அளவிலான திட்டங்களும் பெண் தொழில்முனைவினை ஊக்குவிக்கின்றன.
- தொழில் துறை மற்றும் உள்நாட்டு வர்த்தக ஊக்குவிப்புத் துறையில் (DPIIT) பதிவு செய்யப்பட்ட புத்தொழில் நிறுவனங்களில் கிட்டத்தட்டப் பாதி எண்ணிக்கையிலான நிறுவனங்கள் குறைந்தது ஒரு பெண் இயக்குநரைக் கொண்டுள்ளன.
- பிரதான் மந்திரி முத்ரா யோஜனா (PMMY) திட்டத்தின் கீழ் பெறப்பட்ட மொத்தக் கடன்களில் 68% பெண்கள் பெற்றனர்.
- பிரதான் மந்திரி தெருவோர விற்பனையாளர்களுக்கான ஆத்மநிர்பர் நிதி (PM SWANidhi) திட்டத்தின் கீழான பயனாளிகளில் நாற்பத்து நான்கு சதவீதம் பெண்கள் ஆவர்.
- 2010-11 ஆம் ஆண்டில் 1 கோடியாக இருந்த பெண்கள் தலைமையிலான MSME நிறுவனங்கள் 2023-24 ஆம் ஆண்டில் 1.92 கோடியாக கிட்டத்தட்ட இரட்டிப்பாகின.
- 2010-11 ஆம் ஆண்டில் 17.4% ஆக இருந்த பெண்களுக்குச் சொந்தமான தனியுரிம நிறுவனங்கள் 2023-24 ஆம் ஆண்டில் 26.2% ஆக அதிகரித்துள்ளன.
- பெண்கள் தலைமையிலான MSME நிறுவனங்கள் 2021 மற்றும் 2023 ஆம் நிதி ஆண்டுகளுக்கு இடையில் பெண்களுக்காக 89 லட்சத்திற்கும் அதிகமான கூடுதல் வேலைவாய்ப்புகளை உருவாக்கின.
- 2013 ஆம் ஆண்டில் 42% ஆக இருந்த பெண் பட்டதாரிகளின் வேலைவாய்ப்பு 2024 ஆம் ஆண்டில் 47.53% ஆக உயர்ந்தது.
- 2017-18 ஆம் ஆண்டில் 34.5% ஆக இருந்த முதுகலை கல்வி பெற்ற பெண்களின் வேலை வாய்ப்பு விகிதம் 2023-24 ஆம் ஆண்டில் 40% ஆக அதிகரித்துள்ளது.
- 2025 ஆம் ஆண்டு இந்தியத் திறன்கள் அறிக்கையானது, இந்தியப் பட்டதாரிகளில் 55% பேர் உலகளவில் வேலைவாய்ப்பு பெறுவார்கள் என்று கணித்துள்ளது.
- 16.69 கோடிக்கும் அதிகமான அமைப்புசாரா பெண் தொழிலாளர்கள் e-Shram தளத்தில் பதிவு செய்து, அரசாங்க சமூக நலத் திட்டங்களை அணுகுகின்றனர்.
- 2047 ஆம் ஆண்டிற்குள் வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான முக்கிய இலக்கான 70% பெண் தொழிலாளர் வளப் பங்களிப்பை அடைவதற்கு நாரி சக்தி ஒரு மையமாக உள்ளது.

## INS உதயகிரி மற்றும் INS ஹிம்கிரி


- INS உதயகிரி மற்றும் INS ஹிம்கிரி ஆகிய ரேடாருக்குப் புலப்படாத பல்துறை போர்க் கப்பல்கள் விசாகப்பட்டினத்தில் இந்தியக் கடற்படையில் இணைக்கப்பட்டன.
- இந்தக் கப்பல்கள் சுமார் 75 சதவீதத்திற்கும் அதிகமான உள்நாட்டு உள்ளடக்கத்தைக் கொண்டுள்ளன.
- இந்தப் போர்க்கப்பல்கள் இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் முதல் எதிர் நடவடிக்கை அமைப்பாகவும், அதிகம் தேர்வு செய்யப்படும் பாதுகாப்பு அமைப்பாகவும் இந்தியக் கடற்படையின் பங்கை வலுப்படுத்துகின்றன.

- வங்காள விரிகுடா மற்றும் அதற்கு அப்பாற்பட்ட பகுதிகளில் விரைவான எதிர் நடவடிக்கையையும், பாதுகாப்பான கடல் பாதைகளையும் மேம்படுத்துவதற்காக இந்த இரு கப்பல்களும் கிழக்குக் கடற்படையில் இணைக்கப்படுகின்றன.




# பொருளாதாரச் செய்திகள்

## ஜூலை மாதத்தில் இந்தியாவின் கச்சா எண்ணெய் இறக்குமதி




- இந்தியாவின் கச்சா எண்ணெய் இறக்குமதியானது ஜூலை மாதத்தில் 8.7 சதவீதம் குறைந்து 18.56 மில்லியன் மெட்ரிக் டன்னாக இருந்தது, இது 2024 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் பதிவானதை விட மிகக் குறைவு ஆகும்.
- நாட்டின் எரிபொருள் நுகர்வு மாதந்திர அளவில் 4.3 சதவீதம் குறைந்து 19.43 மில்லியன் டன்னாக இருந்தது.
- வருடாந்திர அளவில், 2024 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் 19.40 மில்லியன் டன்னாக இருந்த கச்சா எண்ணெய் இறக்குமதி 4.3 சதவீதம் குறைந்துள்ளது.
- சுத்திகரிக்கப்பட்டப் பெட்ரோலியப் பொருட்களின் இறக்குமதி 12.8 சதவீதம் குறைந்து 4.31 மில்லியன் டன்களாகவும், அது சார்ந்த விளை பொருட்களின் ஏற்றுமதி 2.1 சதவீதம் குறைந்து 5.02 மில்லியன் டன்களாகவும் உள்ளது.
- ஆகஸ்ட் 27 ஆம் தேதி முதல் அமலுக்கு வர உள்ள இந்தியப் பொருட்கள் மீதான 50

சதவீதம் வரையான வரி ஆனது அமெரிக்க இந்தியாவின் ரஷ்ய எண்ணெய் இறக்குமதியை இலக்காகக் கொண்டு விதிக்கப்பட்டுள்ளன.

❖ வரி அச்சுறுத்தல்கள் இருந்தபோதிலும், இந்தியச் சுத்திகரிப்பு நிறுவனங்கள் வரவிருக்கும் விநியோகங்களுக்காக தள்ளுபடி செய்யப்பட்ட ரஷ்ய எண்ணெயைத் தொடர்ந்து வாங்க திட்டமிட்டுள்ளன.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## X-Guard ஒளியிழை மூலம் இணைக்கப்பட்ட ரேடார் ஏய்ப்பு அமைப்பு




❖ எதிரி நாட்டு ரேடார் மற்றும் எறிகணைகளை குழப்புவதற்காக, இந்திய விமானப் படையானது, சிந்தூர் நடவடிக்கையின் போது ரஃபேல் போர் விமானங்களில் செயற்கை நுண்ணறிவினால் இயக்கப்பட்ட X-Guard ஒளியிழை மூலம் இணைக்கப் பட்ட ரேடார் ஏய்ப்பு அமைப்பினைப் பயன்படுத்தியது.

❖ இஸ்ரேலின் ரஃபேல் நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட X-Guard, ரஃபேலின் ரேடார் மற்றும் மின்னணு அடையாளங்களைப் பிரதிபலிக்கச் செய்து அச்சுறுத்தல் ஆயுதங்களை தவறாக வழிநடத்துகிறது.

❖ பாகிஸ்தான் விமானப்படையின் J-10C போர் விமானங்கள் உண்மையான விமானங்களுக்குப் பதிலாக இந்த ஏமாற்று விமானங்களை குறி வைத்து, தவறான தாக்குதலை ஏற்படுத்தின.

❖ மேம்பட்ட நுட்பம் கொண்ட எறிகணைகளுக்கு எதிராக பல் அடுக்குப் பாதுகாப்பை வழங்குவதற்காக இந்த அமைப்பு ரஃபேலின் SPECTRA மின்னணுப் போர்த் தொகுப்பு அமைப்புடன் செயல்படுகிறது.


## இஸ்ரோ - வான்வழி தரையிறக்கச் சோதனை

❖ ஸ்ரீஹரிகோட்டில் முதல் ஒருங்கிணைந்த வான்வழி தரையிறக்கச் சோதனையை (IADT-01) இஸ்ரோ வெற்றிகரமாக மேற்கொண்டது.

❖ இது ககன்யான் மனித விண்வெளிப் பயணப் பணியில் ஒரு முக்கியப் படி நிலையைக் குறிக்கிறது.


❖ இந்தச் சோதனை 4.8 டன் எடையுள்ள போலி குழுத் தொகுதியை 3 கிமீ உயரத்தில் இருந்து கீழிறக்குவதன் மூலம் பாராசூட் அடிப்படையிலான வேகக் குறைப்பு அமைப்பைச் செயல்பாட்டினை விளக்கிக் காட்டியது.

- விக்ரம் சாராபாய் விண்வெளி மையம் (VSSC) ஆனது மனித விண்வெளி விமான மையம், சதீஷ் தவான் விண்வெளி மையம் மற்றும் இந்திய விமானப் படையுடன் ஒருங்கிணைந்து சுமார் 90% செயல்பாடுகளை மேற்கொண்டது.
- விரிவான மாதிரியாக்கம் மற்றும் கருவிகளின் உதவியுடன் IADT-01 எதிர்பார்த்தத் தரையிறக்கத்தை அடைந்தது என்பதோடு இது பாராசூட் (வான் குடை மிதவை) பயன்பாடு மற்றும் தரையிறங்கும் நிலைமைகள் குறித்த முக்கியமானத் தரவுகளை வழங்கியது.




## சுற்றுச்சூழல் செய்திகள்

### மேற்கு வங்காளத்தில் புதிய ஸ்பிரிங்டெயில் பூச்சி இனங்கள்





- கொல்கத்தாவில் சலினா ஒளரான்டியாமகுலாட்டா மற்றும் சலினா சூடோமொன்டானா எனும் மண்ணில் வசிக்கும் இரண்டு புதிய ஸ்பிரிங்டெயில் பூச்சி இனங்கள் கண்டறியப்பட்டுள்ளன.
- இந்தச் சிறிய கணுக்காலிகள் கரிமப் பொருட்களைச் சிதைத்து, ஊட்டச்சத்துக்களை மறு சுழற்சி செய்வது மற்றும் ஆரோக்கியமான மண் சுற்றுச்சூழல் அமைப்புகளைப்

பராமரிப்பதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

- கடைசியாக 1979 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டதுடன், தற்போது பதிவான இந்தக் கண்டுபிடிப்பு ஆனது இந்தியாவின் மொத்த சலினா இனங்களின் எண்ணிக்கையை 17 ஆக அதிகரிக்கிறது.
- ஸ்பிரிங்டெயில் பூச்சிகள் நிலத்தில் வசிக்கும் பழமையான அறுகாலிகளில் ஒன்றாகும் மற்றும் சுற்றுச்சூழல் அமைப்பு வளம், மாசுபாடு மற்றும் பருவநிலை மாற்றத்தின் முக்கியக் குறிகாட்டிகளாகச் செயல்படுகின்றன.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## தேசிய நல்லாசிரியர் விருது 2025



- மைலாப்பூர் P.S. சீனியர் செகண்டரி (உயர் நிலை) பள்ளியைச் சேர்ந்த ரேவதி பரமேஸ்வரன் 2025 ஆம் ஆண்டிற்கான தேசிய நல்லாசிரியர் விருதுக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.
- திருப்பூரில் உள்ள பாரதியார் நூற்றாண்டுப் பள்ளியைச் சேர்ந்த விஜயலட்சுமி, தமிழ்நாட்டிலிருந்து இந்த விருதிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றொரு நபர் ஆவார்.
- இந்தியா முழுவதும் மொத்தம் 45 ஆசிரியர்கள் 2025 ஆம் ஆண்டிற்கான தேசிய நல்லாசிரியர் விருதைப் பெற உள்ளனர்.
- விருது வழங்கும் விழா செப்டம்பர் 05 ஆம் தேதி புது டெல்லியில் நடைபெற உள்ளது.
- விருது பெறுபவர் ஒவ்வொருவருக்கும் ஒரு தகுதிச் சான்றிதழ், 50,000 ரூபாய் ரொக்கப் பரிசு மற்றும் ஒரு வெள்ளிப் பதக்கம் வழங்கப்படும்.


# முக்கிய தினங்கள்

## தேசிய விளையாட்டு தினம் 2025 - ஆகஸ்ட் 29

- இது ஹாக்கி ஜாம்பவான் மேஜர் தியான் சந்தின் பிறந்த நாளை நினைவு கூருகிறது.
- முதன்முதலில் 1995 ஆம் ஆண்டில் அனுசரிக்கப்பட்ட இத்தினம் 2012 ஆம் ஆண்டு முதல் தேசிய அளவில் கொண்டாடப்பட்டது.
- 2019 ஆம் ஆண்டில் இந்த நாளில் தான் ஃபிட் இந்தியா இயக்கம் தொடங்கப்பட்டது.
- இந்த ஆண்டுக் கொண்டாட்டம் ஆனது ஃபிட் இந்தியா திட்டத்தினால் வழிநடத்தப்பட்டு, ஆகஸ்ட் 29 முதல் 31 ஆம் தேதி வரை மூன்று நாட்கள் நீண்ட, நாடு தழுவிய

விளையாட்டு, உடற்பயிற்சி இயக்கமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

- இந்த நிகழ்வுகளின் கருத்துரு, 'Ek Ghanta, Khel ke Maidan Main' என்பதாகும்.




# இதரச் செய்திகள்

## ஜம்முவில் மிக அதிக மழைப்பொழிவு




- ஜம்முவில் 24 மணி நேரத்தில் 380 மிமீ மழை பதிவாகியுள்ளது, இது 1910 ஆம் ஆண்டிற்குப் பிறகு பதிவான அதிகபட்சப் பதிவாகும்.
- இதற்கு முன்னதாக 1988 ஆம் ஆண்டு செப்டம்பர் 25 ஆம் தேதியன்று 270.4 மிமீ மழைப் பொழிவு பதிவானது.
- இது 1996 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 23 ஆம் தேதியன்று பதிவான 218.4 மிமீ அளவையும் விஞ்சியுள்ளது.
- இந்த அளவானது ஆகஸ்ட் மாதத்திற்கான ஜம்முவின் மாதாந்திரச் சராசரி மழைப் பொழிவான 403.1 மிமீ என்ற அளவிற்கு அருகில் உள்ளது.

☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆